உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்-05 சோபகிருது வருடம் வைகாசி திங்கள் மே 2023 பூமி-03










## சைவத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

இலங்கை வாழ் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாத வகையில் பல்வேறு பிரச்சனைகளை நாடு தொடர்ந்து எதிர்கொள்கிறது. இலங்கையின் பொருளாதாரம் கீழ்நிலைக்கு போனதற்கு இன்று பல்லாயிரக்கணக்கான அறிஞர்கள் நாட்டை விட்டு செல்வதற்கும் அடிப்படைக் காரணம் தீர்க்கப்படாத இனப் பிரச்சனையே. இனப் பிரச்சினை தொடர்பாக இலங்கையின் பொருளாதாரம் இன்று கீழ் நிலையை அடைந்திருக்கின்றது. போருக்காக பல நாடுகளிடம் கடன் பட்டும் போருக்காக செலவு செய்த தொகை அதிகரித்த காரணத்தினாலும். தொடர்ந்து நாட்டிலே ஏற்பட்ட பொருளாதார இடையூறுகள் இன்றுவரை தொடர்ந்து கொண்டு இருக்கின்றது. பல்வேறு அபிவிருத்தி வேலைகள் தடைப்பட்டு போயிருக்கின்றது.

தொடர்ச்சி 02ம் பக்கம்

போர் முடிந்த கையோடு உலக வங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பல்வேறு சமூக நிறுவனங்களுடைய உதவியை பெற்று இலங்கையில் சில அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றாலும் இன்று மிகப்பெரிய பாரதூரமான நிலைக்கு இலங்கை பின்தள்ளப்படுகின்றது. இச் சூழ்நிலையில் கூட இலங்கையின் அரசியல்வாதிகள் இலங்கையின் இனப்பிரச்சினைகளை தீர்க்கின்ற எந்த ஒரு செயற்பாட்டிலும் மும் முறமாக வரவில்லை. இலங்கையின் இனப் பிரச்சினையை தீர்க்க வந்த இந்திய அரசு உருவாக்கிய இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபை செயற்பாடுகள் கூட இன்று செயலற்றுப் போய் இருக்கின்றது. மாகாண சபை தேர்தல்கள் நடைபெறாமல் இருக்கின்றது. இந்த விதமான சுதேசியத்தை கருத்தில் கொண்ட இன உரிமை பாடுகளுக்கான நடவடிக்கைகள் எதுவும் நடைபெறுவதாக இல்லை. இதற்கு மாறாக பௌத்த ஆலயங்களை தமிழர்களின் பாரம்பரியமான நிலங்களில் உருவாக்குவதில் மறைமுகமாக காட்டும் அக்கறை அதிகமாக உள்ளது. இதே வேளையில் உலக நிதி நிறுவனங்கள் அனைத்தும் கை விரித்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் இன்னும் இலங்கை ஆட்சியில் உள்ள அதிசக்தி வாய்ந்த அரசியல் தலைவர்கள் சரியான ஒரு முடிவை எடுக்கவில்லை. இனப்பிரச்சினை தொடர்பான ஒரு உண்மையான தீர்மானங்களை எடுக்காத காரணத்தினால் அருமந்த இத்திருநாடு அலங்கோலமாக மாற்றம் பெற்றுக்கொண்டிருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் ஒருகாலத்தில இம்மண்னை விட்டு ஓடிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது சிங்கள அறிவியீவிகள் குறிப்பாக சிங்கள கல்வி மான்கள் உயர் பதவிகளில் இருப்பவர்கள் குடும்பம் குடும்பமாக நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். இந் நிலையில் தென்னிலங்கை வைத்தியாசாலைகளில் சிறந்த மருத்துவ நிபுனர்கள் இல்லாத சூழ்நிலை உருவாகிவருகிறது. தற்போது கூட இந்த பாரிய இழப்பீடுகள் தொடர்பாக சிந்தித்து ஒரு நல்ல மூடிவை எடுக்கக்கூடியதாக தென்னிலங்கை அரசியல் வாதிகள் இல்லை. துவேசமனப்பாண்புகளை வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இலங்கைத்தமிழர்களும் தலைவர்களும் ஒன்று பட்டு ஒரு அணியாக பேசுகின்ற அல்லது தீர்மானங்களை எடுக்கின்ற பழக்கம் இல்லை. இன்னும் இலங்கை தமிழ் கட்சிகள் கூறுகளாக பிரிந்து கொண்டிருக்கிறது. இவையும் மக்களுக்கு கேடு விளைவிக்க கூடியவை. இதையார் உணரப்போகின்றார்கள்? என்றைக்கு தமிழ் அரசியல் தலைவர்கள் ஒன்று படுகிறார்களோ. அன்று ஏதாவது ஒரு நன்மை பிறக்க வாய்ப்புண்டு. என்றைக்கு சிங்கள அரசியல் தலைவர்கள் உண்மையாக சத்தியமாக பிரச்சினையை தீர்க்க முன்வருகிறார்களோ அன்று இந்த நாட்டுக்கு விடிவு உண்டு. இது இரண்டும் இப்போதைக்கு நடைபெறும் என்று எதிர்பார்க்க முடியாமல் உள்ளது.



மதுரை மீனாட்சி அம்மன்கோவிலில் சித்திரைத் திருவிழாவின் போது தமது பிள்ளைகளை மீனாட்சி போன்று வேடம் புனைந்து பெற்றோர் ஆலயத்திற்கு அழைத்துவரும் காட்சி அதிஅற்புதமானது.

வேதவித்தியசாகர் சுவாமிகளுடன் ரிஷி. தொண்டுநாத சுவாமிகள் 30.04.2023 அன்று கண்டி கலகா சிவபூமி மலையக ஆச்சிரமத்திற்கு வருகைதந்து, அங்கு நடைபெறும் அறநெறிப் பாடசாலை நிகழ்வுகளில் கலந்து கொண்டு, பிள்ளைகளுக்கு அறக்கருத்துரைகளையும் வழங்கினார்கள்.







ஆசிரியர்
கலாநிதி.செஞ்சொற்செல்வர்.
ஆறு.திருமுருகன்
உதவி ஆசிரியர்
திரு.ச.சந்தோஷன்
வடிவமைப்பாளர்
திரு.வ.குணநீதன்

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் பழமை வாய்ந்த சட்டநாதர் கோயிலில், 22 ஐம்பொன் சிலைகள், 55 பீடம், 100க்கும் மேற்பட்ட செப்பேடுகள் மற்றும் பூஜை பொருட்கள் கடந்த மாதம் 16.04.2023 அன்று கண்டெடுக்கப்பட்டன. 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாக இருக்கலாம் என கருதப்படுகிறது. சீர்காழியில் சட்டநாதர் கோவிலின் கும்பாபிஷேகத்திற்காக தோண்டும் போது ஐம்பொன் சிலைகளான விநாயகர்,முருகர்,வள்ளி,தெய்வானை, சோமஸ்கந்தர்,அம்பாள், பூர்ண புஷ்கலா அய்யனார், திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் உள்ளிட்ட 22 சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டன. கூடவே 100க்கும் மேற்பட்ட திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற சீர்காழி தல பதிகம் பொறிக்கப்பட்ட தேவார செப்பேடுகள் கிட்டியுள்ளது





## திருவாசகத்தில் நாய்களின் ஒப்பீடு

திருவாசகத்தில் அறுபத்தேழு இடங்களில் நாய் பற்றிய குறிப்பு காணப்படுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். மணிவாசகப் பெருமான் தன்னை நாயோடு ஒப்பிடுவதற்கான காரணம் என்ன?



நாய் தன் தலைவனை அறியும் தன்மை உடையது. மேலும் தன் தலைவன் மேல் விசுவாசம் மிக்கது. இறைவனைத் தலைவனாக வைத்து மணிவாசகர் அவ்வாறு கூறியிருக்கலாம். அல்லது தனக்குப் பிடிக்காது ஒதுக்கும் ஒன்றை மீண்டும் மீண்டும் சேர்த்துக் கொள்வது நாயின் இயல்பு. தன் வாயினால் கக்கியதைத் தானே திரும்பத் தின்னும் இயல்புடையது. இதன் பொருள் வெறுத்த ஒன்றையே திரும்ப விரும்பும் என்பதாம். ஐந்தறிவு நாய்க்கு அது இயல்பு. ஆனால் ஆறறிவு உடைய மனிதனுக்கும் தான் வெறுத்ததையே மீண்டும் மீண்டும் விரும்புகின்ற குணமுண்டு ஆக ஐந்தறிவு உள்ள நாயின் குணத்தை உயர்த்தித் தான் அதனைவிடக் கீழானவன் என எண்ணும் எண்ணமாகவும் இருக்கலாம். அல்லது கீழ்த்தரமான நாயை விட நான் கீழானவன் என்னும் பொருளிலும் கூறியிருக்கலாம்.

அவ்வாறு திருவாசகத்தில் மணிவாசகர் நாயைக் குறிப்பிட்ட பாடல்களை பார்க்கலாம்.

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே"
(சிவபுராணம்)

"நாயினேனை நலம் மலி தில்லையுள்
கோலம் ஆர்தரு பொதுவினில் வருகென"
(கீர்த்தித் திருஅகவல் )

"சொல்லுவது அறியேன் வாழிமுறையோ
தரியேன் நாயேன் தான் எனைச் செய்தது"

"குரம்பை தோறும் நாயுடல் அகத்தே
குரம்பை கொண்டு இன்தேன் பாய்த்து நிரம்பிய"
(திருவண்டப் பகுதி)



"கனவிலும் தேவர்க்கு அறியாய் போற்றி
நனவிலும் நாயேற்(கு) அருளினை போற்றி"

"பஞ்சுஏர் அடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி"
(போற்றித் திருஅகவல்)

சிந்தனைநின் தனக்காக்கி நாயினேன்தன்
கண்ணினை நின் திருப்பாதப் போதுக் காக்கி"

"நாயில் ஆகிய குலத்தினும் கடைப்படும் என்னை"

"நாசனே நான் யாதுமொன்று அல்லாப் பொல்லா நாயான"

"நகுவேன் பண்டு தோள் நோக்கி நாணம் இல்லா நாயினேன்"

" ஆட வேண்டும் நான் போற்றி அம்பலத்து
ஆடும் நின் கலழ் போது நாயினேன்"
(திருச்சதகம்)

"பொறுப்பர் அன்றே பெரியோர் சிறு நாய்கள்தம் பொய்யினையே"
(நீத்தல் விண்ணப்பம்)

"கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை"

"நாயான நம் தம்மை ஆட்கொண்ட நாயகனை"
(திரு அம்மானை)

"கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட"
(திருப்பொற்சுண்ணம் )

"நாயுற்றசெல்வம் நயந்தறியா வண்ணமெல்லாம்"

"நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை"
(திருக்கோத்தும்பி)

"நாய்மேல் தவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த
(திருச்சாழல்)

"தான் அந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை"
(திருப்பூவல்லி)

"நாயிற் கடைப்பட்ட நம்மையும் ஓர் பொருட்படுத்து"

"நாராயணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்கு"
(திருப்பொன்னூசல்)

"கோதாட்டி நாயேனை ஆட்கொண்டென் தொல்பிறவி
(திருத்தசாங்கம்)

"நாளுமணு காவண்ணம் நாயெனை ஆளுடையான்"
(கோயில் மூத்த திருப்பதிகம்)

"தரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி இனித்தான் நல்காயே"
(செத்திலாப் பத்து)

"நாயி னேன் உனை நினையவும் மாட்டேன்"

"எய்த்தேன் நாயேன் இனியிங்கிருக்க
கில்லேன் இல்வாழ்க்கை"
(ஆசைப் பத்து)

"நைஞ்சேன் நாயேன் ஞானச்சுடரே நானோர் துணைகாணேன்"
(புணர்ச்சிப் பத்து)

"தாதாய் மூவேழு லகுக்கும் தாயே நாயேன் தனை ஆண்ட"
(வாழாப் பத்து)





"கல்லாத புல்ல றிவிற் கடைப்பட்ட நாயேனை"

"ஆதமிலி நாயேனை அல்லலறுத்து ஆட்கொண்டு"
(கண்டப் பத்து)

"பாங்கினொடு பரிசொன்றும் அறியாத நாயேனை"

"புறமே கிடந்து புலைநாயேன் புலம்புகின்றேன் உடையானே"
( பிரார்த்தனைப் பத்து)

"இடரே பெருக்கி ஏசற்றிங்கு இருத்தல் அழகோ அடி நாயேன்"

"ஒன்றும் போதா நாயேனை உய்யக் கொண்ட நின் கருணை"

"நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்"
(குழைத்த பத்து)

"அழகே புரிந்திட்டு அடிநாயேன் அரற்றுகின்றேன் உடையானே"
(உயிருண்ணிப் பத்து)

"நானாரடி யணைவானொரு நாய்க்குத் தவிசி ட்டிங்கு"
(திருவேசறவு)

"பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே"
(அற்புதப் பத்து)

"பொச்சை யானஇப் பிறவியிற் கிடந்துநான்
புழுத்தலை நாய் போல"
(எண்ணப் பதிகம்)

"தரியேன் நாயேன் இன்னதென்று அறியேன் சங்கரா கருணையினால்" (யாத்திரைப் பத்து)

" நகவே ஞாலத் துள்புகுந்து நாயே அனைய நமையாண்ட"

"நாயேன் கழிந்து போவேனோ நம்பி இனித்தான் நல்குதியே"
(ஆனந்த மாலை)

"நாயேன் அடிமை உடனாக ஆண்டாய் நான்தான் வேண்டாவோ"
"நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த"
(அச்சோப்பதிகம்





எமது மண்ணில் பல இடங்களிலும் அநாதரவாக இருந்த நாய்களும் நாய்க்குட்டிகளும் சிவபூமி நாய்கள் சரணாலயத்தில் வயிறார உண்டு, மகிழ்ச்சியாக விளையாடி மகிழ்ந்திருக்கின்றன. நன்றியுணர்வுள்ள அந்த விலங்குகளுக்கு நாமும் நன்றியுணர்வுடன் இருப்பதுதானே தர்மம்.

"யானை அனையவர் நண்பொரீஇ, நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும், எறிந்தவேல்
மெய்யதா, வால்குழைக்கும் நாய்".
(நாலடியார் - 213)

பொருள் :-
தன்னைப் பலகாலம் பேணிக்காத்தவன் என்றறிந்தும் கொல்லும் யானைபோல, நண்பரையே அழிக்கும் தீயவர் உறவு கூடாது. வேல் உடலிலே தைத்திருக்கவும் வால் குழைத்து நிற்கும் நாய்போலத் துன்பம் தாமே இழைத்த காலத்தும் நட்பினை மறவாது அன்புகாட்டும் ஒருவரது நட்பே கொள்ளத்தக்கதாகும்.

# துன்பம் ஒரு சோதனை

வெள்ளம் பெருகும் நதிகளும் ஒருமுறை வறண்டு விடுகிறது. குளங்கள் கோடையில் வற்றி மழைக்காலத்தில் நிரம்புகின்றன.
நிலங்கள் வறண்ட பின்தான் பசுமை யடைகின்றன. மரங்கள் இலையுதிர்ந்து பின் தளிர் விடுகின்றன. இறைவனின் நியதியில் நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருப்பது மலை ஒன்றுதான். அதுவும் வளர்வதாகவும், அமிழ்வதாகவும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

இறைவன் மனிதனையும் அப்படித்தான் வைக்கிறான். நிரந்தரமாக இன்பத்தை அனுபவித்தவனும் இல்லை. நிரந்தரமாகத் துன்பத்தில் உழன்றவனும் இல்லை. முதற்கட்டம் வரவு என்றால், அடுத்தக் கட்டம் செலவு. முதற்கட்டம் இன்பமென்றால், அடுத்தக்கட்டம் துன்பம். முதற்கட்டமே துன்பமென்றால், அடுத்த கட்டம் இன்பம் இறைவனது தராசில் இரண்டு தட்டுக்களும் ஏறி ஏறி இறங்குகின்றன.

“இடுக்கண் வருங்கால் நகுக் அதனை
அடுத்தூர்வ த.ஃ.தொப்ப தில்”

என்றான் வள்ளுவன்.

எல்லாச் செல்வங்களையும் நிரந்தரமாக எவனுக்கும் இறைவன் வழங்கியதில்லை. அந்த நாளில் எனக்கு நல்ல பசியெடுத்தது. உணவு கிடைக்கவில்லை. பின் பசியுமிருந்தது. உணவும் கிடைத்தது. இப்போது உணவு கிடைக்கிறது் பசியில்லை. அடுக்கடுக்காகப் பணம் சேர்த்து, பணக்காரரானார் ஒருவர். ஆன மறுநாளோ, அவரை ‘அரிசி சாப்பிடக்கூடாது சர்க்கரை வியாதி’ என்று சொல்லிவிட்டார் டாக்டர்.

சீனாவில் மாவே - சேதுங் புரட்சி நடக்கும்போது பல ஆண்டுகள் காடுமேடுகளில் ஏறி இறங்கினார். மனைவியைத் தோளில் தூக்கிக்கொண்டு அலையக்கூட வல்லமை பெற்றிருந்தார். புரட்சி முடிந்து, பதவிக்கு வந்து இரண்டே ஆண்டுகளில் நோயில் படுத்தார். ரஷ்யாவில் லெனின் கதையும் அதுதான். புரட்சி நடக்கும்வரை லெனின் ஆரோக்கிய மாகவே இருந்தார். பதவிக்கு வந்த சில மாதங்களிலேயே படுக்கையில் விழுந்தார். சில ஆண்டுகளிலேயே மரணமடைந்தார்.

பிறப்பிலிருந்து இறப்பு வரை துன்பமே இல்லாமல் வாழ்ந்தவர்கள் எத்தனை பேர்? கண்களை மூடிக்கொண்டு எண்ணிப் பாருங்கள். ஒரு கட்டம் அப்படி என்றால், மறு கட்டம் இப்படி! ஏற்றம் என்பது இறைவன் வழங்கும்பரிசு. இறக்கம் என்பது அவன் செய்யும் சோதனை. நீ நினைப்பது எல்லாமே நடந்துவிட்டால், தெய்வத்தை நம்ப வேண்டாம். எப்போது நீ போடும் திட்டம் தோல்வியுறுகிறதோ அப்போது உனக்கு மேலானவன் அதை நடத்துகிறன் என்று பொருள். எப்போது உன் திட்டங்கள் வெற்றி பெறுகின்றனவோ, அப்போது இறைவன் உனக்கும் அனுமதியளித்து விட்டான் என்று பொருள்.

“ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை
நிறையாது முன்வந்து நிற்பினும் நிற்கும்
என்யாளும் ஈசன் செயல்”

என்பது முன்னோர் பழமொழி.

“கற்பகத்தைச் சேர்ந்தார்க்குக்
காஞ்சிரங்ககாய் ஈந்தேன்
முற்பவத்தில் செய்தவினை”

இதுவும் அவர்கள் சொன்னதே.

உனது வாழ்க்கை பூஜ்ஜியத்தில் ஆரம்பமாகிறது. அதற்கு முன்பக்கம் நம்பர் விழுந்தால் இறைவனின் பரிசு பின் பக்கம் விழுந்தால் அவனது சோதனை. மேடும் பள்ளமுமாக வாழ்க்கை மாறி மாறி வந்தால் உனக்குப் பெரிய வீழ்ச்சியில்லை. ஒரேயடியாக உச்சிக்கு நீ போய்விட்டால் அடுத்துப் பயங்கரமான சரிவு காத்திருக்கிறது. என் வாழ்க்கை மேடும் பள்ளமுமாகவே போவதால்,என் எழுத்து வண்டி இருப்பத்தைந்தாண்டு காலமாக ஓடிக்கொண்டிருக்கிறது. இதைத்தான் ‘சகடயோகம்’ என்பார்கள். வீழ்ச்சியில் கலக்கமோ எழுச்சியில் மயக்கமோ இருக்கலாகாது என்றார்கள் நம் முன்னோர்கள்.

‘ஆண்டவனின் அவதாரங்களே ஆண்டவன் சோதனைக்குத் தப்பவில்லை’ என்று நமது இதிகாசங்கள் கூறுகின்றன. தெய்வ புருஷன் ஸ்ரீராமனுக்கே பொய் மான் எது, உண்மை மான் எது என்று தெரியவில்லையே! அதனால் வந்த வனைதானே, சீதை சிறையெடுகப்பட்டதும், ராமனுக்குத் தொடர்ச்சியாக வந்த துன்பங்களும்!

சத்திய தெய்வம் தருமனுக்கே சூதாடக்கூடாது என்ற புத்தி உதயமாகவிலையே! அதன் விளைவுதானே பாண்டவர் வனவாசமும் பாரத யுத்தமும்! முக்காலும் உணர்ந்த கௌதமனுகே,பொய்க்கோழி எது, உண்மைக் கோழி எது என்றுதெரியவில்லையே! அதனால்தானே அகலிகை கெடுக்கப்பட்டதும், சாபம்

பெற்றதும். ஆம், இறைவனின் சோதனை எவனையும் விடாது என்பதற்கு, இவை ஆதாரங்கள்.

துன்பங்கள் வந்தே தீருமென்றும், அவை இறைவனின் சோதனைள் என்றும், அவற்றுக்காக்க் கலங்குவதும் கண்ணீர் சிந்துவதும் முட்டாள்தனமென்றும் உன்னை உணர வைத்து, துன்பத்திலும் ஒரு நிம்மதியைக் கொடுக்கவே அவர்கள் இதை எழுதி வைத்தார்கள். இந்தக் கதைகளை 'முட்டாள்தனமானவை' என்று சொல்லும் அறிவாளிகள் உண்டு. ஆனால்,முட்டாள்தனமான இந்தக் கதைகளின் தத்துவங்கள், அந்த அறிவாளிகளின் வாழ்க்கையையும் விட்டதில்லை. நான் சொல்ல வருவது, 'இந்து மத்த்தின் சாரமே உனது லௌகீக வாழ்க்கையை நிம்மதியாக்கித் தருவது என்பதையே. துன்பத்தைச்சோதனை என்று ஏற்றுக்கொண்டு விட்டால், உனக்கேன் வேதனை வரப்போகிறது?

அந்தச் சோதனையிலிருந்து உன்னை விடுவிக்கும் படி நீ இறைவனை வேண்டிக்கொள் காலம் கடந்தாவது அது நடந்துவிடும்.
தர்ம்ம் என்றும், சத்தியம் என்றும், நேர்மை என்றும், நியாயம் என்றும் சொல்லி வைத்த நமது மூதாதையர்கள்முட்டாள்களல்ல.

கஷ்டத்திலும் நேர்மையாக இரு.
நீ ஏமாற்றப்பட்டாலும் பிறரை ஏமாற்றாதே. உன்வாழ் நாளிலேயே அதன் பலனைக்காண்பாய். தெய்வ நம்பிக்கை உன்னைக் கைவிடாது.

கவிஞர் கண்ணதாசன்
அர்த்தமுள்ள இந்துமதம்



# தாத்தாவுக்கு புகழ் சேர்த்த பேத்தி



ஜீ தமிழ் "சரிகமப" நிகழ்ச்சியில் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி பவதாயினி அவர்கள் தனது தாத்தா தாயக இசைக் கலைஞர் கண்ணன் அவர்களுக்கு பெருமை சேர்த்துள்ளார். பாராட்டுகளும் வாழ்த்துகளும்

ஈழத் தமிழர்களே மறந்துவிட்ட ஒரு தாயக கலைஞரை, உயிருடன் இருக்கிறாரா இல்லையா என தெரியாமல் இருந்த ஒரு வயதான கலைஞரை, அவர் பேத்தி உலக தமிழருக்கு முன்னால் அழைத்து வந்து பெருமைப்படுத்த முடியுமா?

ஆம் என நிரூபித்துள்ளார் பேத்தி பவதாயினி. இதைவிட அந்த தாத்தாவுக்கு வேறு என்ன வேண்டும்?

தாத்தாவிற்கும் பேர்த்திக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்






# கீரிமலை தீர்த்தக் கரையில் நாவலர்

சிவபூமியில் சைவத்துக்கும் தமிழுக்கும் பெருந்தொண்டாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் திருவுருவச்சிலை சிவபூமி அறக்கட்டளை ஊடாக அன்பளிப்பு செய்யப்பட்டு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களால் சித்திரைப் புதுவருடப் பிறப்பு அன்று(14.04.2023) மாலை கீரிமலை கடற்கரையில் திறந்து வைக்கப்பட்டது. இச்சிலையை திரு. ப.மனோகர் அழகுற வடிவமைத்தார்.



நாவலர் பெருமான் சைவநெறி தழைத்தோங்கவும், தமிழ் மொழி செழித்து வளரவும் பெரும் பணியாற்றியவராவார்.

யாழ்ப்பாணம், நல்லூர் கந்தப்பிள்ளை, சிவகாமி அம்மையார் ஆகிய இருவருக்கும் புதல்வனாக 1822ம் ஆண்டு அவதரித்தார்.

இலங்கையும், இந்தியாவும் அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்த போது சைவமும், தமிழும் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்கிய காலப் பகுதியிலே தோன்றியவர் தான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.



வரலாற்றுக்கு முற்பட்ட சமயமாகவும், ஈழம் வாழ் மக்களின் பெரும்பாலானோரது உள்ளத்துள் ஒளி விளக்காய் சுடர்விட்டிலங்குவதுமான சைவ சமயம் அந்நியரது செல்வாக்கு வலிவுற்றிருந்த காலத்தில் சிறிது நலிவுற்றிருந்தது.

இலங்கைக்கு வர்த்தக நோக்கோடு வந்த அந்நிய ஆட்சியாளர் அரசியலாதிக்கத்தைக் கைப்பற்றவும் தற்சமயம் கொள்கையை பரப்பவும் எண்ணங்கொண்டு கல்வி வழிப்பிரசாரம் செய்யத் தலைப்பட்டனர். அந்நியவெற்று நாகரீகப் போக்கில் ஈடுபாடு கொண்ட மக்கள் சுயசமய கலாசார வழிகளை மறந்து வாழ்வாராயினர்.

இவ்வாறு சைவ சமயம் நலிவுற்றிருந்த வேளையில் நாவலர் பெருமான் தனது சொல்லாலும் எழுத்தாலும் மக்கள் அகக் கண்களைத் திறந்து அவல நிலையை அவர்களுக்கு உணர்த்தியதோடு சைவமும், தமிழும் மீண்டும் புத்துயிர் பெறுவதற்காக தம்மாலியன்ற அத்தனை பணிகளையும் செய்தார். அவரின் கல்விப் புலமையையும், நாவன்மையை யும், சைவத் தமிழ் பணிகளையும் பாராட்டி திருவாடுதுறை ஆதீனம் அவருக்கு ‘ நாவலர்’ என்ற பட்டத்தை வழங்கியது. சைவம் காத்த நாவலர் பெருமானை சைவமக்கள் ஐந்தாம் சமயக்குரவர் எனப் போற்றுகின்றனர்.

சிவ சமயத்தை அழிய விடாது பாதுகாக்க நாவலர் பல முயற்சிகளை மேற்கொண்டார். சைவ சமயத்தவர் ஒரு சிலரிடம் காணப்பட்ட தவறான பழக்க வழக்கங்கள், செயல்கள் என்பவற்றை நீக்க முயன்றார். சைவப் பாடசாலைகளை நிறுவினார். திருக்கேதீஸ்வரம், கீரிமலைச் சிவன் கோயில் என்பனவற்றின் தொன்மைச் சிறப்புக்களை மக்களுக்கு எடுத்துக் கூறி அவற்றைப் புனரமைத்து நித்திய, நைமித்திய பூஜைகளுக்கு வழிவகுக்குமாறு சைவ மக்களுக்கு விஞ்ஞாபனம் விடுத்தார்.

தம் வாழ்நாள் பூராவும் தமிழுக்கும் சைவத்துக்கும் சேவையாற்றி வந்த நாவலர் பெருமான் 1879ம் ஆண்டு கார்த்திகை மாதம் மக நட்சத்திரத்தில் இறை பதம் அடைந்தார்.

கீரிமலை நகுலேசுவரர் கோயில் புனருத்தாரணம் ஆவதற்கு காரணமான பெருமானாரின் சிலை கீரிமலை மண்ணிலேயே நிறுவப்பட்டமை சாலப் பொருத்தமாகும்





# யாழ்ப்பாணத்தில் நடிகர் திலகத்திற்கு மரியாதை

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் குறித்து தமிழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் முனைவர் மருதுமோகன், சென்னை பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து எழுதிய “சிவாஜி கணேசன்” எனும் நூலின் அறிமுக விழா 23.04.2024 காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.




மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள் கலந்துகொண்டிருந்த இந்த நிகழ்வில் நடிகர் திலகத்தின் மகன் ராம்குமார் கணேசன் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டார்.


யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தொடக்கவுரையை இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் நிகழ்த்தினார். இலங்கையுடனான இந்தியாவின் நெருக்கமான உறவு குறித்தும், யாழ்ப்பாணம் மூளாய் மருத்துவமனைக்கு 70 வருடங்களுக்கு முன்னர் சிவாஜி கணேசன் எவ்வாறு உதவினார் என்பதையிட்டும் தனது உரையின் போது அவர் விளக்கினார்.



அதனைத் தொடர்ந்து “நீங்கா நினைவில் சிவாஜி” என்ற தலைப்பில் பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவின் சிறப்புரை இடம்பெற்றது.

நூலாசிரியர் அறிமுகத்தை சிவா பிள்ளை நிகழ்த்த, நூல் அறிமுக உரையை முனைவர் கா.வெ. செ.மருதுமோகன் நிகழ்த்தினார். யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா நூலை வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து ராம்குமார் கணேசன் சிறப்புப் பிரதிகளை அதிதிகளுக்கு கையளித்தார்.

இதனைத் தொடர்ந்து சிறப்பு நிகழ்ச்சியாக இலங்கை, இந்திய பேச்சாளர்கள் பங்குகொண்ட பட்டிமன்றம் ஒன்றும் இடம்பெற்றது. செந்தமிழ்ச் சொல்லருவி லலீசன் இதற்குத் தலைமைதாங்கினார்.




அதோடு ராம்குமார் கணேசன் குழுவினர் சிவாஜி கணேசன் உதவி புரிந்த மூளாய் வைத் தியசாலைக் கும் விஜயம் செய்தார்.






கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள் அவுஸ்திரேலியா பயணம் செய்து தமிழர் வாழும் பல பகுதிகளிலும் சொற்பொழிவுகள் மற்றும் விழாக்களில் கலந்து கொண்டார்.



233 ஆண்டுகள் பழமை வாய்ந்த யாழ் -வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் மகா கும்பாபிஷேகம் 26.04.2023 அன்று நடைபெற்றது.




யாழ்ப்பாணம்,சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தில் 29.04.2023 அன்று 1008 பானைகளில் விசேட பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்றன.











சிவபூமி அறக்கட்டளையால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட விக்கிரகங்கள் நீதிமன்ற அனுமதியுடன் வெடுக்குநாறிமலையில் மீள பிரதிஷ்டை செய்யப்பட்டன.





## இதய அஞ்சலி


குப்பிழான் ஐ.சண்முகன் என்ற புனைபெயரால் அனைவராலும் நன்கு அறியப்பட்ட குப்பிழான் மண்ணின் தனிப் பெரும் அடையாளமாகவும், சிறுகதை உள்ளிட்ட பல்துறை ஆளுமையாளராகவும், அனுபவப் பெட்டகமாகவும் திகழ்ந்த பிரபல எழுத்தாளர் ஐ.சண்முகலிங்கம் (குப்பிழான் ஐ.சண்முகன்) அவர்கள் இன்று திங்கட்கிழமை(24.03.203) அதிகாலை-04 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தனது 76 ஆவது வயதில் காலமானார்.




அவரது மறைவு ஈழத்து இலக்கிய உலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.




வரலாற்றுச்
சிறப்பு மிக்க
மானிப்பாய்
மருதடி விநாயகர்
ஆலயத்தின் 2023ஆம்
ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவம்
22.03.2023 புதன்கிழமை கொடியேற்றத்துடன்
ஆரம்பமாகி உற்சவம் தொடர்ந்து 25 தினங்கள்
இடம்பெற்றது. சித்திரை மாதம் புதுவருடப் பிறப்பன்று
பல்லாயிரக்கணக்கான பத்தர்கள் புடைசூழ விநாயகப்
பெருமானின் இரதோற்சவத்திருவிழா
மிகச்சிறப்பாக நடைபெற்றது.







வரலாற்றுச்
சிறப்பு மிக்க அருள்மிகு
மாதுமை உடனுறை
கோணேஸ்வரப் பெருமான் திருக்கோயில்
மகோற்சவம் கொடியேற்றத்துடன்
05.04.2023 அன்று ஆரம்பமாகி தொடர்ந்து
இருபத்தொரு தினங்கள் மகோற்சவம்
சிறப்பாக இடம்பெற்றது.






ISBN - 978-955-7420-00-4